3. அறிவிப்புகள்

(அ) தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக நிர்வாக வாரியத்திற்கான தேர்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக நிர்வாக வாரியத்திற்கான தேர்தலுக்காக திரு. கோவை செழியன் அவர்களின் பெயர் நியமனம் செய்யப்பட்டுள்ளது. நிரப்பப்பட வேண்டிய ஒரு வெற்றிடத்திற்கு மேற்படி நியமனம் முறைப்படி செய்யப்பட்டுள்ளதால், திரு. கோவை செழியன் அவர்கள் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக நிர்வாக வாரியத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார் என நான் அறிவிக்கிறேன்.

4. அரசினர் தீர்மானம்

பேரவை அலுவல் வரிசையில் மாற்றம்

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: பேரவைத் தலைவர் அவர்களே, "14–7–1971-ம் நாளன்று எடுத்துக்கொள்ளப்பட வேண்டிய கோரிக்கை எண் 25—பழங்குடி மக்கள், அரிசனங்கள் முதலியோர் நலன் 26–7–1971-ம் நாளன்றும், 26–7–1971-ம் நாளன்று எடுத்துக் கொள்ளப்பட வேண்டிய கோரிக்கை எண்கள் 3—பொது விற்பனை வரிகளும், ஏனைய வரிகளும், தீர்வைகளும், நிர்வாகம், 34—எழுதுபொருள் அச்சுத்துறை ஆகியவைகள் 14-7–1971-ம் நாளன்றும், கோரிக்கை எண் 5—பத்திரப் பதிவுத்துறை, கோரிக்கை எண் 24—தொழிற்சாலைகள் உட்பட தொழிலாளர் கோரிக்கையுடன் 22–7–1971-ம் நாளன்று எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

5. அறிக்கை அளித்தல்.

சட்ட விதிகள் ஆய்வுக்குழுவின் முதலாவது அறிக்கை

THIRU P. SEENIVASAN: Mr. Speaker, Sir, I present the first Report (Fifth Assembly) of the Committee on Subordinate Legislation.

3. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஆ) தமிழ்நாடு 1971-ம் ஆண்டு நகர்ப்புற நிலவரி (திருத்த) சட்ட முன்வடிவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ்நாடு 1971-ம் ஆண்டு நகர்புற நிலவரி (திருத்த) சட்டமுன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்வதற்கும், ஆய்வுக்கு எடுத்துக்கொள்வதற்கும் ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.